TNVR010051292025

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவில்லிபுத்தூர்.

முன்னிலை:– திரு. T.V.மணி, B.A., L.L.B.,

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.

ஸ்ரீவில்லிபுத்தூர்.

2026 ம் ஆண்டு ஜூன் திங்கள் 6 ஆம் நாள் சனிகிழமை

**OS.No.343/2025**

S.முருகன் ... வாதி

–எதிர்–

A.கருப்பசாமி ...பிரதிவாதி

இந்த வழக்கானது என் முன்பாக 02.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.D.ரவிசந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.V.கீர்த்தனா அவர்கள் முன்னிலையான போதிலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாமலும் இருந்தமையால் கடந்த 24.04.2026 அன்று தோன்றாதரப்பினராக கருதப்பட்டும். வாதி தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள் மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இன்று இந்த வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

வாதிக்கு பிராதில் தபசில் கண்ட சொத்துக்களிலிருந்தும் ரூ.28,18,133/– கிடைக்கும் படிக்கும். அதில் அசல் ரூ.16,00,000/–க்கு பிராது தேதி முதல் அசல் வசூல் தேதிவரை நீதிமன்ற உத்தரவுப்படி பின் வட்டி கிடைக்கும்படி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்புவித்தும், முதல்நிலை தீர்ப்பாணை பிரகாரம் பிரதிவாதி தீர்ப்பாணை தொகையை செலுத்தாவிட்டால் பிராது தபசில் சொத்துக்களைப் பொறுத்து இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பித்தும் பிராதின் தபசில் கண்ட சொத்தை நீதிமன்றம் மூலம் ஏலம் போட அனுமதித்தும், அவ்வாறு ஏலம் போடுவதன் மூலம் கிடைக்கக் கூடிய தொகையை வாதியின் டிகரி கடனுக்கு வரவு வைத்துக் கொள்ள அனுமதி அளித்தும் அவ்வாறு ஏல விற்பனை தொகை மூலம்

கிடைக்கப்பெற்ற தொகை தீர்ப்பாணை தொகைக்கு குறைவாக இருக்கும் பட்சத்தில் மீதம் உள்ள தீர்ப்பாணைத் தொகையை வசூல் செய்ய பிரதிவாதி மீது Personal Decree வழங்க கோரியும், வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதி செலுத்த கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **பிராது சுருக்கம்**

பிரதிவாதிக்கு சிவகாசி, சார்பதிவாளர் அலுவலக கிரையப் பத்திர எண்.650/2017 என நம்பராகப் பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் மூலம் தபசில் சொத்து பாத்தியப்பட்டதாகும். அதன் பேரில் பிரதிவாதியானவர் அவரது குடும்ப செலவுக்காக வாதியிடம் 04.08.2022 ல் ரொக்கம் கடனாக ரூ.16,00,000/–ம் கடன் தருமாறு கேட்டதில் வாதியும் ஒப்புக் கொண்டு, மேற்படி தேதியில் மேற்படி அடமானக் கடன் தொகையை வாதியிடமிருந்து பிரதிவாதி பெற்றுக் கொண்டிருக்கின்றார். அந்த கடன் தொகைக்கு ரூ.100.00 க்கு மாதம் 1 க்கு வட்டி ரூ.2.00 வீதம் வட்டி கூட்டி கூடிய வட்டியை மாத மாதம் பிரதிவாதி வாதிக்கு தவறாது செலுத்தி வந்து தவணை முடிவான 03.08.2024 ம் தேதியில் அடமான அசல் தொகை ரூ.16,00,000/–யை பிரதிவாதி, வாதிக்கு செலுத்திவிட்டு அடமானத்தை செல்லுடன் மீட்டுக் கொள்வதாகவும், தவறினால் மேல்நின்ற நாளைக்கு மேல் கண்ட தவணைப்படி வட்டி கூட்டி கூடிய வட்டிக்கு வட்டி சகிதம் தபசில் சொத்தைப் பொறுத்தாவது, அல்லது பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட இதர சொத்துக்களைப் பொறுத்து வாதி நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஒப்புக் கொண்டு 04.08.2022 ம் தேதி பதிவு செய்யப்பட்ட சிவகாசி சார்பதிவாளர் அலுவலக அடமானக் கடன் பத்திர எண்.7957/2022 ன் படி வதிக்கு ஆதரவாக அடமானப் பத்திரம் பிரதிவாதி எழுதிக் கொடுத்துள்ளார். பிரதிவாதியானவர் இதுவரை வட்டிக்காகவோ, அசலுக்காகவோ வாதியிடம் எந்தவிதமான இரண்டு வருட தவணை காலம் 03.08.2024 ல் முடிவடைந்து விட்டது. பணமும் செலுத்தி வைக்கவில்லை. அடமான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அடமானக் கடனை செலுத்த பிரதிவாதியானவர் இதுவரை முன்வரவில்லை. தாவா அடமானக்கடன் தொகையை வசூல் செய்யும் பொருட்டு வாதி தனது வழக்கறிஞர் மூலம் இந்நிர் பிரதிவாதிக்கு 04.07.2025 ம் தேதி அறிவிப்பு அனுப்பியுள்ளார். ஷை அறிவிப்பை இந்நிர் பிரதிவாதி 08.07.2025 ம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார். இந்த பிரதிவாதி ஷை அறிவிப்பை பெற்றுக் கொண்டு நாளது தேதி வரை எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. தாவா அடமானக் கடன் வகைக்கு பணமும் செலுத்தவில்லை. எனவே இவ்வழக்கானது வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.V.கீர்த்தனா அவர்கள் முன்னிலையான போதிலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாமலும் இருந்தமையால் கடந்த 24.04.2026 அன்று தோன்றாதரப்பினராக கருதப்பட்டுள்ளது.

4) வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) வாதி கோரிய படி முதல்நிலைதீர்ப்பாணை அவருக்கு கிடைக்கதக்கதா?

2) வாதிக்கு கிடைக்க கூடிய வேறு பரிகாரம் என்ன?

5) வாதி தரப்பில் வாதியே வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6) வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

7) வாதி தன் தரப்பை நிரூபிக்க வாதி தரப்பில் வாதியே வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளார். அதில் பிரதிவாதிக்கு சிவகாசி சார்பதிவாளர் அலுவலக கிரையப் பத்திர எண்.650/2017 என நம்பராகப் பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரம் மூலம் தபசில் சொத்து பாத்தியப்பட்டதாகும். அதன் பேரில் பிரதிவாதியானவர் அவரது குடும்ப செலவுக்காக தன்னிடம் 04.08.2022 ல் ரொக்கம் கடனாக ரூ.16,00,000/-ம் கடன் தருமாறு கேட்டதில் தானும் ஒப்புக் கொண்டு, மேற்படி தேதியில் மேற்படி அடமானக் கடன் தொகையை தன்னிடமிருந்து பிரதிவாதி பெற்றுக் கொண்டிருக்கின்றார் என்றும் அந்த கடன் தொகைக்கு ரூ.100.00 க்கு மாதம் 1 க்கு வட்டி ரூ.2.00 வீதம் வட்டி கூட்டி கூடிய வட்டியை மாத மாதம் பிரதிவாதி தனக்கு தவறாது செலுத்தி வந்து தவணை முடிவான 03.08.2024 ம் தேதியில் அடமான அசல் தொகை ரூ.16,00,000/-யை பிரதிவாதி, தனக்கு செலுத்திவிட்டு அடமானத்தை செல்லுடன் மீட்டுக் கொள்வதாகவும், தவறினால் மேல்நின்ற நாளைக்கு மேல் கண்ட தவணைப்படி வட்டி கூட்டி கூடிய வட்டிக்கு வட்டி சகிதம் தபசில் சொத்தைப் பொறுத்தாவது, அல்லது பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட இதர சொத்துக்களைப் பொறுத்து தான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள ஒப்புக் கொண்டு 04.08.2022 ம் தேதி பதிவு செய்யப்பட்ட சிவகாசி சார்பதிவாளர் அலுவலக அடமானக் கடன் பத்திர எண்.7957/2022 ன் படி தனக்கு ஆதரவாக அடமானப் பத்திரம் பிரதிவாதி எழுதிக் கொடுத்துள்ளார் என்றும் பிரதிவாதியானவர் இதுவரை வட்டிக்காகவோ, அசலுக்காகவோ தன்னிடம் எந்தவிதமான இரண்டு வருட தவணை காலம் 03.08.2024 ல் முடிவடைந்து விட்டது என்றும் பணமும் செலுத்தி வைக்கவில்லை என்றும் அடமான பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள அடமானக் கடனை செலுத்த பிரதிவாதியானவர் இதுவரை முன்வரவில்லை என்றும் தாவா அடமானக்கடன் தொகையை வசூல் செய்யும் பொருட்டு தான் தனது வழக்கறிஞர் மூலம் இந்த பிரதிவாதிக்கு 04.07.2025 ம் தேதி அறிவிப்பு அனுப்பியுள்ளார் ஷை அறிவிப்பை இந்த பிரதிவாதி 08.07.2025 ம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார். இந்த பிரதிவாதி ஷை அறிவிப்பை பெற்றுக் கொண்டு நாளது தேதி வரை எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை உள்ளது தாவா அடமானக்

கடன் வகைக்கு பணமும் செலுத்தவில்லை. எனவே இவ்வழக்கானது வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

8) மேலும் வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 மூலம் 04.08.2022ம் தேதியிட்ட பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த அடமானக் கடன் பத்திரம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 22.02.2017ம் தேதியிட்ட பிரதிவாதி தானசெட்டில்மென்ட் ஆவணம் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 04.07.2025ம் தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிககை அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆகவும், 08.07.2025ம் தேதியிட்ட வாதி அனுப்பிய நோட்டீஸை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திருமதி.V.கீர்த்தனா அவர்கள் முன்னிலையான போதிலும் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய போதிய காலஅவகாசம் அளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாமலும் இருந்தமையால் கடந்த 24.04.2026 அன்று தோன்றாதரப்பினராக கருதப்பட்டு ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலமும் வா.சா.1ன் சாட்சியம் மூலமும் வாதி கோரிய பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா என்பதை பரிசீலிக்கும் பொழுது, வாதியின் வழக்கிற்கு மொத்தத்தில் எதிர்வாதி தரப்பில் ஆட்சேபணை இல்லை என்பதையே காண முடிகின்றது. எனவே வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 ஆவணத்திலிருந்தும் வாதியின் வழக்கு உண்மை என்றும் வாதிக்கு வழக்கில் கோரிய பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்று பிரச்சனை எண்கள் 1 மற்றும் 2க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

முடிவாக பிரதிவாதி, வாதிக்கு ரூ.28,18,133/–யையும் அதில் அசல் தொகை ரூ.16,00,000/–க்கு பிராது தேதி முதல் தீர்ப்பாணை தேதி வரை 9% வட்டி சேர்த்தும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை செலுத்தும் காலம் வரை வட்டி 6% பின்வட்டி சேர்த்தும் கொடுக்க வேண்டுமென்று முதல் நிலை தீர்ப்பாணை வழங்கியும் வழக்கின் செலவுத் தொகையையும் எதிர்வாதி செலுத்த வேண்டும் என்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. தொகையை செலுத்த 3 மாத காலஅவகாசம் வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு

அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 6ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI

Digitally signed by T V MANI
Date: 2026.06.06 16:58:25 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

<u>வாதி தரப்பு சாட்சி</u>

வா.சா.1 – திரு.முருகன் (வாதி)

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

வா.சா.அ.1 – 04.08.2022 ம் தேதியிட்ட பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த அடமானக் கடன் பத்திரம் அசல்

வா.சா.ஆ.2 – 22.02.2017 ம் தேதியிட்ட பிரதிவாதி தானசெட்டில்மென்ட் ஆவணம் அசல்

வா.சா.3 – 04.07.2025 ம் தேதியிட்ட வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிககை அலுவலக நகல்

வா.சா.ஆ.4 – 8.07.2025 ம் தேதியிட்ட வாதி அனுப்பிய நோட்டீஸை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை

T V MANI

Digitally signed by T V MANI
Date: 2026.06.06 16:58:31 +0530

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.

கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்.

ஸ்ரீவில்லிபுத்தூர்.

OS.No.343/2025

தீர்ப்புரை நாள் – 06.06.2026

**OS. NO.343/2025, Date : 06.06.2026**

Judgment is pronounced.

As a result the suit is decreed with cost. The Defendant is directed to pay a sum of Rs.28,18,133.00 and out of it for Rs.16,00,000.00 from the date of plaint till the date of Decree interest amount shall be paid at 9 percentage per annum and from the date of Decree till the date of realisation 6 percentage subsequent interest per annum shall be paid. And Preliminary Decree is passed. Time for payment is 3 months.

Additional District Judge,
Srivilliputhur.